# <u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
# <u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
# <u>MCOP .No.190/2022</u>

**<u>நாள் : 05.03.2026</u>**

**எ.ம.சா.** 1 (2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சீனிவாசன் | மாவட்டம் | : | வேலூர் |
| தந்தை பெயர் | : | திரு.சின்ன எல்லன் | வயது | : | 55 |
| ஊர் | : | பேர்ணாம்பட்டு | தொழில் | : | உதவி மேலாளர் |
| வட்டம் | : | பேர்ணாம்பட்டு | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை**

நான் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அந்த வகையில் வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு பரிச்சையம். 2ஆம் எதிர்மனுதாரர் சார்பாக இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 23 BT 4729 பதிவு எண் கொண்ட மேக்கி கேப் வேனின் பதிவு சான்றிதழ் நகல் –எ. ம.சா.ஆ.1

2. TN 23 BT 4729 பதிவு எண் கொண்ட மேக்கி கேப் வேனின் தகுதி சான்றிதழ்(FC) நகல் – எ.ம.சா.ஆ.2

3.TN 23 BT 4729 பதிவு எண் கொண்ட மேக்கி கேப் வேனின் பர்மிட் நகல் – எ.ம.சா.ஆ.3

4. TN 23 BT 4729 பதிவு எண் கொண்ட மேக்கி கேப் வேனின் காப்பீட்டு பாலிசி நகல் – எ.ம.சா.ஆ.4

5. TN 23 BT 4729 பதிவு எண் கொண்ட மேக்கி கேப் வேனின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் – எ. ம.சா.ஆ.5

6. TN 23 BT 4729 பதிவு எண் கொண்ட மேக்கி கேப் வேனின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் –எ. ம.சா.ஆ.6

7. இறுதி அறிக்கை நகல் – எ.ம.சா.ஆ.7

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். 31.03.2022ஆம் தேதியில் விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து தேதியில் மேக்சி கேப் வாகனமானது எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி மேக்சி கேப் வாகனத்தை ஓட்டிச் சென்ற ஓட்டுநருக்கு எதிராகத்தான் எ.ம.சா.ஆ.7 குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்தை பொருத்து மனுதாரர் மூன்றாம் தரப்பினர் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு மனுதாரர் மேகசி கேபில் பயணித்ததால் மூன்றாம் தரப்பினர் அல்ல என்று கூறுகிறார். மேக்சி கேப் ஓட்டுவருக்கு விபத்து சமயத்தில் செல்லத்தகு ஓட்டுநர் உரிம் இருந்தது என்றால் சரிதான். மேக்சி கேப் வாகனத்திற்கு பர்மிட் இருந்தது என்றால் சரிதான். எனவே எங்கள் நிறுவனம் மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணயில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற அனுமதியுடன் மறுவிசாரணை</u>**

மேக்சி கேப் வாகனத்தில் 12+1 நபர் பயணிக்கத்தான் பர்மிட் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அதுபற்றி பாலிசி நிபந்தனைகளில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களை காட்டிலும் கூடுதல் நபர்கள் பயணித்தால் காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரிதான்.

**மறுகுறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் மேக்சி கேப் வாகனத்தில் 32 பேர் பயணிக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் காப்பீடு அமலில் இருந்தது என்றால்

சரிதான். விபத்து சமயத்தில் மனுதாரர் மேக்சி கேப் வாகனத்தில பயணித்ததை பொருத்து எந்த ஒரு மாற்று கருத்தும் எனக்கு இல்லை என்றால் சரிதான். அதேபோல் மனுதாரருக்கு விபத்தினால் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். மேக்சி கேப்க்கு எடுக்கப்பட்ட பாலிசியில் வாகனத்தில் பயணிக்கும் Occupant–க்கும் பிரிமியம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு எங்களது நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் பாலிசி விதிகளை மீறப்படவில்லை என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.